# சங்க இலக்கியங்களில் வணிகமும் நடனமும் ஒரு பன்முகப் பார்வை

9

**தி. ராஜகுமாரி[1] & முனைவர் சோபனா சுவாமிநாதன்[2]**

**[1]திருநங்கை பரதநாட்டியக் கலைஞர்,**

**முனைவர் பட்ட ஆய்வாளர்(பரதம்)**

[2]இணைப் பேராசிரியர்

**வேல்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ் டெக்னாலஜி அண்ட் அட்வான்ஸ்டு ஸ்டடீஸ் (VISTA) சென்னை.**

**ஆய்வுச்சுருக்கம்:**

சங்க காலத் தமிழ்ச் சமூகம் பொருளாதார ரீதியாக வணிகத்திலும், கலாச்சார ரீதியாக ஆடற்கலையிலும் சிறந்து விளங்கியது. இக்கட்டுரை சங்க இலக்கியப் பாடல்களின் வழி அக்கால உள்நாட்டு, வெளிநாட்டு, வணிக முறைகளையும், ஆடல்கலைகளின் நுட்பங்களையும் அவற்றுக்கு இடையேயான சமூகப் பொருளாதார தொடர்புகளையும் ஆராய்கிறது.

தரவுச்சொற்கள்:

- சங்க கால வணிகக் கட்டமைப்பு
- சங்க இலக்கியங்களில் ஆடல்
- வணிகமும் ஆடலும் - சமூகத்தொடர்பு

**ஆய்வின் நோக்கம்:**

சங்க இலக்கியங்களில் தமிழர்களின் வணிகம் பற்றியும் அதன் வாயிலாக ஆடல்களை எப்படி வாழ்ந்தது என்பது பற்றியும் ஆராய்ந்து சங்க கால மக்களின் அருமை பெருமைகளை இளம் தலைமுறையினருக்கு கொண்டுசேர்ப்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.

**முன்னுரை:**

சங்க காலம் என்பது தமிழர்களின் நாகரிகம், பண்பாடு மற்றும் பொருளாதாரம் உச்சத்தில் இருந்தகாலமாகும். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற உயரிய தத்துவத்தைக் கொண்டிருந்த தமிழர்கள் கடல்கடந்து வாணகம் செய்ததோடு கலைகளையும் கண்ணெனப் போற்றினர்.

சங்க காலத்தில் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வணிகம் மிகவும் செழித்து விளங்கியது. பண்டமாற்று முறை (நெல்லைக் கொடுத்துப் பொருள்களைப் பெறுதல்)

நடைமுறையில் இருந்தது. குறிப்பாக மருவூர்பாக்கம்( கடற்கரை) பட்டினப்பாக்கம் (உள்நாடு) நகரங்கள் வர்த்தக மையங்களாக விளங்கின. மதுரையும் உறையூரும் சிறந்த ஆடை வணிக மையங்களாகவும் கொற்கை முத்து வணிகத்திற்கும் கடலோரப் பகுதிகள் மிளகு போன்ற நறுமணப் பொருள்களின் ஏற்றுமதிக்கும் புகழ்பெற்று விளங்கின.

சங்க காலத்திலும் அதற்கு அடுத்த பிற்காலத்திலும் கல்வியும் கைத்தொழிலும், வணிகமும் மிகவும் சிறந்த நிலையில் இருந்தன. இறைவழிபாடு உடையவர்களாகவும் நாகரிகத்திலும் சிறந்தவர்களாகவும் தமிழர்கள் வாழ்ந்தார்கள்.

சங்க இலக்கியங்கள் 'பொருள்' ஈட்டுவதை ஆடவர் கடமையாகக் கருதியதை விளக்குகின்றன. அதே வேளையில், பொருள் ஈட்டியபின் கிடைக்கும் ஓய்வு நேரத்தையும் செல்வத்தையும் கலைகளுக்காகச் செலவிட்டனர். சங்கத் தமிழரின் அக மற்றும் புற வாழ்க்கையில் வணிகம் அடித்தளமாகவும் ஆடல் ஒரு கலை வெளிப்பாடாகவும் அமைந்திருந்தது.

**சங்க கால வணிகக் கட்டமைப்பு:**

சங்க காலப் பொருளாதாரம் வேளாண்மை மற்றும் வணிகத்தை அடிப்படையாகக் கொண்டது. சங்க இலக்கியங்களான பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி மற்றும் நற்றிணை போன்றவை அக்கால வணிகச் சிறப்பைத் தௌ;ளத் தெளிவாக விளக்குகின்றன.

தமிழகத்தில் விளைந்த விளை பொருள்களும் (உணவுப் பொருள்கள் மற்றும் இலவங்கம், ஏலம், மிளகு போன்றவை) கைத் தொழிற் கொருள்களும் நாட்டின் தேவையை நிறைவு செய்ததோடு பிற நாடுகளுக்கு விற்பனைப் பொருட்களாக அனுப்பும் அளவு மிகுந்து விளங்கின. கீடை நாடுகளிலிருந்து பட்டு, பீங்கான் போன்ற பொருள்களும் மேலை நாடுகளிலிருந்து போர்க்கருவிகள், உயர்ந்த மதுவகைகள், கண்ணாடி ஆகிய பொருள்களும் இறக்குமதியாயின. சேரநாட்டு மிளகு, ஏலம், யானைத்தந்தம் ஆகியவற்றிற்கு அயல்வாடுகளில் மிகுந்த வரவேற்பு இருந்தன. ஏற்றுமதிப் பொருள்களுக்கும், இறக்குமதிப் பொருள்களுக்கும் அரசாங்க முத்திரையிடும் வழக்கம் இருந்தது. காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, தொண்டி, முசிறி போன்ற துறைமுகங்களில் பண்டகசாலைகள் இருந்ததையும், கலங்களில் பொருள்களை ஏற்றுதல், இறக்குதல் ஆகிய பணிகள் இரவும் பகலும் நிகழ்ந்தன என்பதையும் சங்கப் பாடல்கள் தெளிவாகக் கூறுகின்றன.

உள்நாட்டு வணிகம்:

நாணயப் புழக்கம் இருந்தாலும், பண்டமாற்று முறை புழக்கத்தில் இருந்தது.

"நெல்லின் நேரே வெண்கல் உப்பு" (அக-140)

என்னும் அகநானூறு குறிப்பிடுகிறது. அதாவது நெல்லுக்கு நிகராக உப்பு பரிமாறப்பட்டது.

**வெளிநாட்டு வணிகம்:**

பூம்புகார் போன்ற துறைமுக நகரங்களில் 'யவனர்கள்' (ரோமானியர்கள்ஃகிரேக்கர்கள்) வந்து தங்கி வணிகம் செய்தனர். மிளகு, தந்தம், மற்றும் முத்துக்கள் ஏற்றுமதி செய்யப்பெற்றன.

"யவனர் தந்த வினைமாண்
நன்கலம் பொன்னொடு வந்து கறியொடு பெயரும்" (அக.-149)

என்கிறது. யவனர்களுடைய நன்கு வடிவமைக்கப்பட்ட கப்பல்கள் பொன்னைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, அதற்குப்பதிலாக மிளகு மூட்டைகளை ஏற்றிக் கொண்டு சென்ற வளமான முசிறித் துறைமுறைத்தைப் பற்றி இப்பாடல் கூறுகிறது. அதாவது பொன்னைக் கொடுத்து மிளகை (கறி) வாங்கிச் சென்றனர் என்கிறது சங்க இலக்கியம்.

**வணிக அறமும் நெறிகளும்:**

"கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைகெடாது"

வாங்கும்போது அதிகமாக வாங்காமலும், கொடுக்கும்போது குறைவாகக் கொடுக்காமலும் நடுநிலைமையுடன் வணிகம் செய்தனர். எனப் பட்டினப்பாலை வணிகர்களின் நேர்மையைப் போற்றுகிறது. லாபத்தை விட அறத்திற்கே முன்னுரிமை அளிக்கப்பட்டது என்பது இதன்மூலம் நாம் அறிகிறோம்.

**ஏற்றுமதி - இறக்குமதிப் பொருள்கள்:**

புகார் நகரில் குவிந்து கிடந்த வணிகப் பொருட்களைப் பற்றி பட்டினப்பாலை பட்டியலிடுகிறது.

"நீரின் வந்த நிமிர்ப் பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்..." (பட்டினப்பாலை – 185-187)

கடல்வழியாக வந்த குதிரைகள், தரைவழியாக வந்த மிளகு மூட்டைகள், இமய மலையிலிருந்து வந்த மணிகளும் பொன்னும் எனப் பன்னாட்டு வணிகம் நடைபெற்றதை இப்பாடல் உறுதிப்படுத்துகிறது.

**சங்க காலத்தில் நடனம்:**

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் இயற்கையோடு

இயைந்த சங்கத் தமிழர் வாழ்க்கையில் இசையும் கூத்தும் இரண்டறக் கலந்து இருந்தமையை நன்கு புலப்படுத்துகின்றன. உணர்வுகளின் வெளிப்பாடாகவும் சடங்குகள், விழாக்களோடு தொடர்புnஉடையனவாகவும் விளங்கிய இவ்விரு கலைகளும் தொழில்முறையாகவும் வழக்கில் இருந்தன. பல்வேறு சூழல்களில் மக்கள் தமக்குள் ஆடிப்பாடிக் களித்து இருந்த காட்சிகளைப் படம்பிடிக்கும் இலக்கியங்கள், தொழில்முறைக் கலைஞர்களாகப் பாணர், பாடினியர், கோடியர், வயிரியர், விறலியர், முதலியோரையும் அறிமுகப்படுத்துகின்றன. அவர்களில் பாணரும், பாடினியரும் பாட்டு வல்லமையராய் இருந்தமையுடன் யாழ் இசைப்பதிலும் வல்லமை பெற்றிருந்னர். கோடியரும் வயிரியருமான ஆடற்கலைஞர்களோ ஆடுவதில் மட்டும் திறனாளர்களாத் திகழமல் கருவியிசைக் கலைஞர்களாகவும் மிடற்றுக் கலைஞர்களாகவும் விளங்கினர். விறலியர் எனப்பட்ட இவர்த் பெண்டிரும் பல்கலை வல்லுநர்களாய் வாழ்ந்தனர். சங்க இக்கியங்களில் ஆல்கலை ‘கூத்து’ என்ற சொல்லால் வழங்கப்பட்;டது. நடனம் வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்ல அது ஒரு வாழ்வியல் கலையாகவும், வழிபாட்டு முறையாகவும் இருந்தது.

சங்கத் தமிழகத்தில் ஆடல் பல்வேறு முறைகளில் பயிலப்பட்டது. மக்கள் தமக்குள் மகிழ்ந்தாடிய ஆடல் வகைகள் பெரும்பாலும்கு ஆடல்களாகவே அமைந்தன. அவை கண்டும், கேட்டும் கற்றுக் கொள்ளப்பட்டன. பரத்தையரும், தொழில்முறைக் கலைஞர்களும்nகுடும்பத்தின் மூத்தர்வர் பால் இக்கலையைப் பயின்று தேர்ந்தனர். ‘படுகின்ற இயங்களின் கண்ணொலியையும் பாட்டினையும் பயின்று மகளி;ர் அடும் அரங்கம்’ எனும் பரிபாடற் செய்யுளுரை ஆடற்கலை முறைப்படி பயிற்றுவிக்கப்பட்டமையைச் சுட்டுகிறது.

அரச்சலூர் நாகமலையில் காணப்படும் பொ.கா.4ஆம் நூற்றாண்டினவான தத்தகாரக் கல்வெட்டுகள் இரண்டும் ஆடலுக்கான சொற்கட்டுகளைக் குறிக்கின்றன. தேவன் சாத்தன் அமைத்த இவ்வட்டெழுத்துக் கல்வெட்டுகள் இலக்கியக் கூற்றுகளுக்குக் காலம் காத்துத் தந்திருக்கும் கல்வெட்டுனச் சான்றெனலாம்.

**ஆடல் வகைகள்:**

சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினோரு வகை ஆடல்கள் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இது சங்க காலத்தின் தொடர்ச்சியாகவே கருதப்படுகிறது. சங்க கால ஆடல்களைக் குழுஆடல்கள், தனியர் ஆடல்கள் என்றும் அக ஆடல்கள், புற ஆடல்கள் என்றும் மக்கள் ஆடல்கள், தொழிற்கலைஞர் ஆடல்கள் என்றும் முவ்வேறு வகைப்படுத்தலாம்.

**கூத்தரும் விறலியரும்:**

தெருக்களில் ஆடிக்காட்டும் 'கூத்தர்கள்' மற்றும் ஆடல்கலையில் சிறந்து விளங்கிய 'விறலியர்கள்' மன்னர்களையும், வள்ளல்களையும் நாடிச்சென்று ஆடல்பாடல்களை நிகழ்த்தி பொன்னும் பொருளும் பெற்று வாழ்ந்தனர் என்பது பற்றியும் அவர்களின் ஆடல் திறத்தையும், உடல் அழகையும் சங்க இலக்கியங்களான சிறுபாணாற்றுப்படையும் மலைபடுகடாமும் நுணுக்கமாக விவரிக்கின்றன.

வழிபாட்டு நடனம்:

குறிஞ்சி நிலத்தில் "வெறியாட்டு" மற்றும் முல்லை நிலத்தில் 'குரவைக் கூத்து' போன்றவை தெய்வ வழிபாட்டோடு இணைந்த நடனங்களாகும்.

**வெறியாட்டு:**

குரவைக்கூத்து: முல்லை நில மக்கள் ஆடிய குழு நடனம். ஆய்ச்சியர்கள் கண்ணனைப் புகழ்ந்து ஆடிய குரவைக் கூத்தைப் பற்றிச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

"வஞ்சிக் கொம்பே போன்றோர் ஒருபால்,

மயிலின் சாயல் உடையார் ஒருபால்,

குரவை கோத்தக் கொள்கை காணீர்" (சிலம்பு – ஆய்ச்சியர் குரவை)

கொடிபோன்ற இடைகொண்ட பெண்களும், மயில் பே-hன்ற சாயல் கொண்ட பெண்களும், இணைந்து கை கோத்து ஆடும் "குரவை" நடனத்தின் அழகை இது படம்பிடித்துக் காட்டுகிறது.

**விறலியர்களின் ஆடல்சிறப்பு:**

விறலியர்கள் ஆடும்பொழுது அவர்களின் கைகள் மற்றும் கல்களின் அசைவுகள் எவ்வளவு நுட்பமாக இருந்தன என்பதை மலைபடுகடாம் விவரிக்கிறது.

"நரம்பும் முழவும் தாளமும் தேர்ந்து
இயர்புற உணர்ந்த இருவகைப் புணர்ப்பின்
ஆடல் ஆய்ந்த விறலியர்" (மலைபடுகடாம் - 39 – 41)

வணிகமும் ஆடலும் - சமூகத்தொடர்பு:

வணிகத்தின் மூலம் கிடைத்த பொருளாதாரச் செழிப்பு கலைகள் வளர அடித்தளமக அமைந்தது.

**செல்வந்தர்களின் ஆதரவு:**

வணிகத்தி; ஈட்டிய பொருளைக்கொண்டு அரசர்களும், வணிகச் செட்டியார்களும் ஆடல் கலைஞர்களை (விறலியர்களை) ஆதரித்தனர். வணிகர்கள் ஈட்டிய இலாபம்

கலைகர்களுக்குப் பரிசில்களாக வழங்கப்பெற்றது. சிலப்பதிகாரத்தில் வரும் மாதவி ஒரு ஆடலரசி. அவளது அரங்கேற்றத்தின் போது மன்னன் வழங்கிய “ஆயிரத்தென் கழஞ்சுப் பொன்” என்பது வணிக நகரமான புகாரின் செழிப்பைக் காட்டுகிறது.

**நகரமயமாக்கல்:**

சங்க காலத்தில் மதுரை தூங்கா நகராய் விளங்கியதை மருதனார் மூலம் அறியமுடிகிறது. பகல் நேரக் கடைகளாகிய “நாளங்காடி” பற்றியும் இரவு நேரத்தில் திறக்கப்படும் “அல்லங்காடி” (அல்-இரவு, அல்லும் பகலும்) பற்றியும் விளக்குகிறார். கடல்நீர் ஆவியாகி மேகமாவதால் கடல் வற்றிவிடுவதில்லை ஆறுகள் பல கடலில் வந்து கலப்பதனால் கடல் பொங்கி வழிவதுமில்லை. அது போல் மக்கள் திரளாக வந்து பொருட்களை வாங்குவதால் பொருட்கள் தீர்ந்து விடுவதும் இல்லை: பல இடத்திலிருந்தும் வணிகர்கள் விற்வபனைக்குப் பொருட்களைக் கொண்டு வருவதால் பொருட்கள் மிகுந்து விடுவதும் இல்லை என்கிறார். அதை,

மழைகொளக் குறையாது, புனல்புக மிகாது
கரைபொருது இரங்கும் முந்நீர் போல,
கொளக்கொளக் குறையாது, தரத்தர மிகாது,

என்னும் வரிகள் விளக்குகின்றன.

புகார், மதுரை போன்ற வணிக நகரங்கள் கலைகளின் சங்கமமாகத் திகழ்ந்தன. வணிக வீதிகளில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கமாக இருந்தது.

வணிக நகரங்களில் மாலை நேரங்களில் கலை நிகழ்ச்சிகள் களைகட்டியதை மதுரைக்காஞ்சி விவரிக்கிறது.

“சில்லொலிச் சிதறுதலும் ஆடலும் பாடலும்
பல்வகைச் செழுங்குரல் ஓவாது இசைப்ப”

(மதுரைக்காஞ்சி – 610-611)

வணிகம் செழித்த மதுரை மாநகரில், மாலையில் ஆபரணங்கள் ஒலிக்கும் சத்தமும், ஆடல் பாடல்களின் இசையும், எந்நேரமும் ஒலித்துக்கொண்டே இருந்தன என்று மதுரைக்காஞ்சி எடுத்துரைக்கிறது. இது பொருளாதாரச் செழிப்பு எவ்வாறு கலைகளை வளர்த்தது என்பதற்குச் சான்றாகும்.

**முடிவுரை:**

சங்க இலக்கியங்கள் காட்டும் வணிகம் தமிழர்களின் பொருளாதார வலிமையையும், நடனம் தமிழர்களின் நுண்ணுணர்வு மற்றும் கலைத்திறனையும்

பறைசாற்றுகின்றன. அறம் சார்ந்த வணிகமும், நெறிமுறை சார்ந்த ஆடலும் பண்டைத் தமிழர்களின் வாழ்வை முழுமைப்படுத்தின. சங்க இலக்கியங்கள் 'பொருள்' ஈட்டுவதை ஆடவர் கடமையாகக் கருதியதை விளக்குகின்றன. அதே வேளையில், பொருள் ஈட்டியவின் கிடைக்கும் ஓய்வு நேரத்தையும், செல்வத்தையும் கலைகளுக்காகச் செலவிட்டனர். சங்கத் தமிழரின் அக மற்றும் புற வாழ்க்கையில் வணிகம் அடித்தளமாகவும், ஆடல் ஒரு கலை வெளிப்பாடாகவும் அமைந்திருந்தது.

**துணைநூற்பட்டியல்:**


1. பட்டினப்பாலை – கடியலூர் உருத்திரங்கண்ணனார்
2. மதுரைக்காஞ்சி – மாங்குடி மருதனார்
3. பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும் – க. கைலாசபதி, குமரன் புத்தக நிலையம், 1999 வெளியீடு.
4. தமிழர் நாகரிகமும் பண்பாடும் - அ.தட்சிணாமூர்த்தி, வெற்றிச்செல்வி வெளியீட்டகம், தஞ்சாவூர். 1973.